முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 628/2023

<u>பி.வா.சா.1 / கனகராஜ் /01.12.2025</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பனியன் வேஸ்ட் வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தமிழ் எழுத, படிக்க மற்றும் கையொப்பம் செய்ய தெரியும். என்னிடம் காட்டப்படும் எனது கிரயப்பத்திரமான வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள தாவா சொத்து யாரிடம் இருந்து கிரயம் பெறப்பட்டது என்று கேட்டால் Annai Sathya Handloom Weavers இல் இருந்து பெறப்பட்டதாகும். தாவா சொத்தை நான் கிரயம் பெறும் போது வீடாக இருந்தாக காலி நிலமாக இருந்ததா என்று கேட்டால் ஓட்டு வீடாக இருந்தது. நான் தற்போது தாவா சொத்தில் தான் வசித்து வருகிறேனா என்றால் தற்போது அங்கு வசிக்கவில்லை. நான் தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். வாதி ஹேமலதாவை எனக்கு எவ்வாறு தெரியும் என்று கேட்டால் என் மகன் மூலமாக தான் தெரியும். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 மூலமாக கிரயம் பெற்ற தாவா சொத்தை நான் எங்கு அடமானம் வைத்தேன் என்று கேட்டால் ஸ்ரீராம் பைனான்சில் அடமானம் வைத்தேன். அதற்கு முன்பு நான் ரெப்கோ வங்கியில் ரூ25,00,000/— கடன் வாங்கியிருந்தேன். ஆனால், என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 வில்லங்க சான்றிழ் ரூ.15,00,000/— கடன் வாங்கியதாக தான் அதில் கண்டுள்ளது என்றால் சரிதான். ரெப்கோ வங்கியில் நான் மாதம் எவ்வளவு வட்டி செலுத்தி வந்தேன் என்று கேட்டால் எனக்கு தெரியாது என் மகனுக்கு தான் தெரியும். நான் ரெப்கோ வங்கியில் வாங்கிய கடனை எப்படி அடைத்தேன் என்று கேட்டால் ஸ்ரீ ராம் சிட்டி பைனான்சில் இருந்து பெற்ற கடனை கொண்டு அடைத்தேன். எத்தனை வருடங்கள் ரெப்கோ வங்கியில் லோன் கட்டினேன் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ஸ்ரீ ராம் சிட்டி பைனான்சில் லோன் வாங்கும் போது யார் யார் கையொப்பம் செய்து லோன் பெற்றோம் என்றால் நான், என் மனைவி, என் மகன் ஆகியோர் கையொப்பம செய்தோம். ஸ்ரீ ராம் சிட்டி பைனான்சில் எவ்வளவு தொகை கடனாக பெற்றேன் என்றால் ரூ25,00,000/— ஆகும். ஸ்ரீ ராம் சிட்டி பைனான்சில் பெற்ற கடனுக்கு நான் மாதம் எவ்வளவு லோன் தொகை

செலுத்தி வந்தேன் என்று எனக்கு தெரியுமா என்றால் என் மகனுக்கு தான் தெரியும். எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் இல்லை. ஸ்ரீ ராம் சிட்டி பைனான்சில் எதற்காக கடன் வாங்கினேன் என்றால் ரெப்கோ வங்கியில் பெற்ற கடனை அடைப்பதற்காக வாங்கினேன். இவ்வழக்கின் தாவா சொத்து சம்மந்தமாக வேறு வழக்கு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மணிமாறன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் திருப்பூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு வருகை தந்துள்ளேனா என்றால் வந்துள்ளேன். எதற்காக வந்துள்ளேன் என்று கேட்டால் என் மகன் கார்த்திகேயன் மணிவண்ணனிடம் கடன் வாங்கியிருந்தார். அதற்காக நான் பான்டில் கையொப்பம் மட்டும் செய்திருந்தேன். எதற்காக வழக்கு நடந்தது என்று எனக்கு தெரியாது. சமரசம் செய்து கொள்ளலாம் என்று சொன்னதால் மேற்படி நீதிமன்றத்திற்கு நான் சென்றிருந்தேன். அந்த சமரசத்தின் அடிப்படையில் எவ்வளவு பணம் செலுத்த ஒத்துக்கொள்ளப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இல்லை முடிந்துவிட்டது. மேற்படி நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் எண் O.S.No.44/2019 என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் யார் பணம் கொடுத்தார்கள் என்று கேட்டால் குமார் என்பவர் மணிவண்ணனுக்கு செலுத்தினார். எவ்வளவு பணம் செலுத்தினார் என்று எனக்கு தெரியாது. என்ன காரணத்திற்காக குமார் அவ்வாறு பணம் செலுத்தினார் என்று கேட்டால் குமாரும், ஹேமலதாவும் பைனான்ஸ் தொழில் செய்கிறார்கள். அவர்களிடம் நான் கடன் வாங்கி ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்சில் ரூ.42,00,000/– செலுத்தி கடனை அடைத்தேன். அவ்வாறு கடன் கொடுத்த ஹேமலதாவும், குமாரும் அசல் பத்திரத்தினை வாங்கி கொண்டார்கள். அசல் பத்திரம் ஹேமலதா மற்றும் குமாரிடம் ஒப்படைக்கும் போது ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்சின் மேனேஜர் என்னிடம் கையொப்பம் ஏதாவது வாங்கினாரா என்றால் ஞாபகம் இல்லை. பெரிய தொகயான ரூ.42,00,000/– ஐ முன்பின் தெரியாத எனக்கு ஹேமலதா மற்றும் குமார் கடனாக கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றும் தாவா கிரய ஒப்பந்தத்திற்காகதான் மொத்தம் ரூ.48,00,000/– கிரய தொகையாக கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்சில் இருந்து ஜப்தி செய்வதற்கு தாவா சொத்து வீட்டில் நோட்டிஸ் ஒட்டப்பட்டதா என்றால் ஆமாம். அதனால் தான் ஹேமலதா மற்றும்

குமாரிடம் கடனுக்காக அணுகினோம். ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்சில் பணம் செலுத்திய பிறகு வாதி ஹேமலதா தாவா சொத்தை கிரயம் செய்து கொள்ள தொடர்பு கொண்டாரா என்றால் இல்லை. வாதி ஹேமலதா தாவா சொத்தை கிரயம் எழுதி கொள்ள வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு அனுப்பப்பட்ட அழைப்பாணையை நான் பெறாததால் அது தாவா சொத்தில் உள்ள என் வீட்டில் ஒட்டப்பட்டது என்றும் அதன் பிறகு தான் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் பணம் பெற்று கொண்டு என் கடனையெல்லாம் அடைத்து தாவா சொத்தை கிரயம் எழுதி தர மறுத்து அபகரிக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.12.01 20:32:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.